வடக்கு மாகாண சபை – 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வடக்கு மாகாண சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பறிக்கை 2025 யூன் 30 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூலை 16 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும், அறிக்கையின் பிரதி 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையில் முன்வைப்பதற்காக ஆளுனருக்கும் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ளதாக்கப்பட்ட பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மத்திய மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மூலதத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	கண்டாவளை பிரதேசத்தில் 2016 திசெம்பர் 16 தொடக்கம் 2046 திசெம்பர் 15 வரையான 30 வருட காலப்பகுதிக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட அரச காணிக்கான நிலுவைக் குத்தகை ரூபா 4,212,000 மீளாய்வாண்டு நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்காமையினால் மீளாய்வாண்டு மாகாண நிலுவை வருமானம் ரூபா 4,212,000 குறைத்து காட்டப்பட்டுள்ளது.	2025ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கும் நிலுவையை அறவிடுவதற்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.	நிலுவைக் குத்தகை கணக்குக்கு கொண்டுவரப்படல் வேண்டும்
(ஆ)	வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் 06 வகையினுள் 21 எண்ணிக்கையான நிதியல்லா சொத்துக்கள் வருடாந்த கணக்கெடுப்பின் பின்னரான நடவடிக்கையின் மூலம்	கணக்கறிக்கைகளில் சீராக்கம் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.	நடைமுறையல்லா சொத்துப் பெறுமதி சீராக்கம் செய்யப்படல் வேண்டும்

	அழிக்கப்பட்டதுடன் அவற்றின் பெறுமதி நிதியல்லா சொத்துக்களின் பெறுமதியிலிருந்து கழித்துக் காட்டப்படாமையால் நடைமுறையல்லா சொத்து அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.		
(இ)	01 அமைச்சு, 10 திணைக்களங்கள் மற்றும் 03 மாகாண நிறுவனங்களினால் மீளாய்வாண்டு வரையில் மூலதனச் சொத்துகளின் கொள்வனவு, மேம்படுத்தல்கள் மற்றும் வெளிப்படுத்தல்களின் போது தமது நிறுவன நிதியல்லாச் சொத்துக்களினை குறைத்துக் காட்டியமையால் மாகாண நிதியத்தின் நிதியல்லா சொத்துக்கள் கூட்டுமொத்தம் ரூபா. 488,513,648 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.	குறைத்துக்காட்டப்பட்ட சொத்துக்களை நிதியல்லாச்சொத்துக்களில் உள்ளடக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.	நடைமுறையல்லா சொத்துப் பெறுமதியினுள் உள்ளடக்கப்படல் வேண்டும்
(ஈ)	05 திணைக்களங்கள் மற்றும் 01 மாகாண நிறுவனத்தினால் மூலதனச் சொத்துகளின் வகைப்படுத்தல் தவறு மற்றும் இரட்டை வெளிப்படுத்தல்களினால் தமது நிதியல்லா சொத்துக்களை கூட்டிக்காட்டியமையால் மாகாண நிதிய நிதியல்லா சொத்துக்கள் கூட்டுமொத்தம் ரூபா 81,582,470 ஆல் கூட்டிக்காட்டப்பட்டிருந்தது.	தற்போது சீர்செய்யப்பட்டுள்ளது.	நடைமுறையல்லா சொத்துப் பெறுமதி உண்மையாக காட்டப்பட வேண்டும்

1.2.2 கணக்காய்வு சான்றுகள் இல்லாமை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபார்சுகள்
ஆளுநர் செயலகத்தின் ரூபா. 1,110,730 திருத்த வேலைக்கானதும், ரூபா. 941,350 பெறுமதியான வாகன திருத்தத்திற்கான திருப்திகர அறிக்கைகள் மற்றும் ரூபா. 1,468,570 உபசரனைச் செலவுகளுக்கான நிகழ்வுகள் விபரம் மற்றும் பங்குபற்றியோர் ஒப்பம் ஆகிய சான்றுகளை சமர்ப்பிக்கப்பட்டிராமையால் கணக்காய்வில் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.	பதில் தரப்படவில்லை	கொடுப்பனவுக்கான சான்றுகள் உறுதிச்சீட்டுடன் இணைக்கப்படல் வேண்டும்

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளக கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் மாகாண திறைசேரி உள்ளடங்கலான அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் வடக்கு மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன.

நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால், மேலும்

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- வேண்டுமென்றே, விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்த்தல் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை வெளியிடுவதற்கு கருதவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்ததன்மை கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்ததன்மை மதிப்பீடு செய்யப்பட்டன.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்கள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டதுடன் அதற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டன என்பது, மதிப்பீடுசெய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

1.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	இணக்கமின்மை	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவை அத்தியாயம் IX இன் பிரிவு 2.2	சர்வதேச தொழிலாளர் அமைப்பு திட்ட நிதியளிப்பின் கீழ் நடாத்தப்பட்ட பயிற்சிப் பட்டறைகளில் அலுவலர்களுக்கு வளவாளர் கொடுப்பனவுகளாக தொழிற்துறைத் திணைக்களத்தினால் கடமை நேரத்தில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,032,000 இல் 25 வீதமான தொகை அறவிட்டு திரண்ட நிதியத்திற்கு வைப்புச் செய்யப்பட்டிருக்க வில்லை.	தாபனவிதிக் கோவையுடன் இணங்க நடவடிக்கை எடுக்கப்படும்	தாபனவிதிக் கோவையுடன் இணங்குதல் வேண்டும்.
(ஆ)	2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை நியதிச்சட்டம்			
	பிரிவு 2 (எ)	தேசிய போக்குவரத்து சபைகளும் தனியார் போக்குவரத்து துறைக்குமிடையே நியாயமான போட்டிக்கு இடமளிக்ககூடிய வகையில்	தேசிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்களில் அனைத்து பேரூந்துகளுக்கும் GPS கருவிகளை பொருத்தி கண்காணிக்கும் திட்டம்	ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்

		வினைத்திறனான பயணிகள் சேவையை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்க வில்லை.	உள்ளெடுக்கப்பட்டதனா ல் விரைவாக இத்திட்டம் நடைமுறைப்படுத்துவதற் கான சாத்தியம் அதிகரித்துக் காணப்படுகின்றது.	
	பிரிவு 54 (2)	பேருந்து தரிப்பிடங்களிலிருந்து அல்லது நிறுத்திடங்களிலிருந்து பேருந்துகளை தொழிற்படுத்துவதற்கான நேர அட்டவணைகளை வலுவுறுத்துவதற்கும் நேர அட்டவைணைகளை முகாமை செய்வதில் ஈடுபட்டுள்ள பணியாற் தொகுதியினரை மேற்பார்வை செய்வதற்கும் அத்தகைய பணியாற் தொகுதியினருக்கும் பணிப்புரைகளையும் அறிவுறுத்தல்களை யும் வழங்குவதற்கு சபையானது போதுமான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.	திடீர்ப்பரிசோதனை உத்தியோகத்தர்கள் மூலம் நேர அட்டவணைகள் முகாமை செய்யப்பட்டு தண்டப்பணம் அறவிடப்படுகின்றது.	ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்
	பிரிவு 54 (3)	நேர அட்டவணைகளை முகாமை செய்வதற்கு போதியளவான பணியாற்தொகுதியினரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை	ஆளணி மீளாய்வு செய்யப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்
(இ)	2006 ஆம் ஆண்டின் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டி			
	(i) பிரிவு 2.11.2	பெறுகை குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்புக் குழு உறுப்பினர்களின் வரவினை உறுதிப்படுத்துவதற்குரிய தனியான வரவுப் பதிவேடு பேரவைச் செயலகத்தில் காணப்பட்டிருக்கவில்லை.	தற்போது பெறுகைக்குழு மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டுக்குழு உறுப்பினர்களின் வருகையினை உறுதிப்படுத்துவதற்கு தனியான வரவுப்பதிவேடு பேணப்படுகின்றது.	வரவுப்பதிவேடு பேணப்படல் வேண்டும்
	(ii) பிரிவு 2.14.1 மற்றும் 3.4(2)	மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட வீதிப் பராமரிப்பு வேலைகளின் 53 சதவீதமான ரூபா 397 மில்லியன் பெறுமதியான 35 எண்ணிக்கையான வீதி பராமரிப்பு வேலைகள் வாங்குதல் முறையில் திணைக்களத்தின் சுயவிருப்பின் பேரில்	384 மில்லியன் நவம்பர் மாத இறுதியில் கிடைக்கப் பெற்றமையால் இவ்வேலைகள் பெறுகை வழிகாட்டி 2.14.1 பிரிவு 3.4 இல் கூறப்பட்டவாறு முன்னைய செயலாற்றலை கருத்திற்கொண்டே	பெறுகை நடைமுறையை பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்

		தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்கள் பெறப்பட்டு வேலைகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.	வழங்கப்பட்டது.	
(ஈ)	வடக்கு மாகாணசபையின் மாகாண நிதி விதிகள்			
	இல 70.5	விவசாயத் திணைக்களத்தின் விபத்திற்குட்பட்ட ஒரு வாகனத்திற்கான இறுதி விசாரணை அறிக்கை ஒரு வருடம் கடந்த நிலையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	விவசாய அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை முற்றுப்பெற்று அறிக்கை கிடைக்கப் பெறவில்லை.	உரிய காலத்தில் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்
(உ)	அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 30/2016 ஆம் இலக்க 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய சுற்றறிக்கை	08 நிறுவனங்களின் 33 எண்ணிக்கையான வாகனங்களுக்கு எரிபொருள் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	திருத்தம் மேற்கொள்ளப்பட்ட பின்னர் எரிபொருள் பரிசீலிப்பு மேற்கொள்ளப்படும்.	உரிய கால இடைவெளியில் எரிபொருள் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்
(ஊ)	2018 அக்டோபர் 12 ஆந் திகதிய PS/CSA/11-18 இலக்க ஜனாதிபதி செயலக சுற்றறிக்கையின் பந்தி 4.3	எரிபொருள் படிகள் மீளளிப்புக்கள் அல்லாமல் மாதாந்தம் செலுத்த வேண்டும் என குறிப்பிட்டிருந்தும் ஆளுநர் செயலக ஒரு வாகனத்திற்கு எரிபொருள் வழங்கல் கட்டளையூடாக எரிபொருள் நிரப்புமாறு அறிவுறுத்தப்பட்டு தற்போதுவரை கட்டளைகள் மூலம் எரிபொருள் நிரப்பப்படுகின்றது.	தற்போது மாதாந்த கொடுப்பனவாக செலுத்தப்பட்டு வருகின்றது.	சுற்றறிக்கையுடன் இணங்குதல் வேண்டும்
(எ)	2017 ஏப்ரல் 19 ஆம் திகதிய 03/2017 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை	மாகாண ஆளுநரின் தனிப்பட்ட பணிக்குழாமிற்கு 2024 ஆம் ஆண்டிற்கான மேலதிகநேரக் கொடுப்பனவுகள் யாவும் வரவுப் பதிவேடுகளுடன் அல்லது கைவிரல் அடையாளப் பதிவு இயந்திரத்தில் உள்வருகை மற்றும் வெளிச் செல்லல் பதிவு உறுதிப்படுத்தப்பட்டிருக்காமல் வழங்கப்பட்டிருந்தது.	பதில் தரப்படவில்லை	சுற்றறிக்கையுடன் இணங்குதல் வேண்டும்

(ஏ)	30 ஏப்ரல் 2020 திகதிய PF/06/2015(ii) இலக்க வடக்கு மாகாண நிதிசுற்றறிக்கை	வாங்குதல் முறையினூடாக பொருட்களை கொள்வனவு செய்யும் போது பிராந்திய நிறுவனங்களுக்கு அதிகாரமளிக்கப்பட்ட எல்லை ஒரு மில்லியனாக உள்ளபோதும் அதற்கு மாறான வகையில் செட்டிக்குள ஆதார வைத்தியசாலையினால் ஒப்பந்தளிப்பு இடம்பெற்றிருந்தது.	2023ஆம் ஆண்டில் இடம்பெற்றிருப்பினும் எதிர்வரும் காலத்தில் உரிய தவறு இடம்பெறாதிருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.	நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும்
(ஐ)	வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை			
	அத்தியாயம் XVIII இன் பிரிவு 257 (I) , 257(II)	வருடாந்த இடமாற்றக் கொள்கையின் படி ,டமாற்றக் கட்டளைகளை பெற்றுக் கொண்ட 23 உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றக் கட்டளைகள் 2023, 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் பெற்றுக்கொண்ட நிலையில் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களினால் விடுவிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காத தோடு அவ் அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று அதிகாரியினால் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.	முக்கியமான பரீட்சைகள் மற்றும் வினைத்திறமைகாண் பரீட்சைகள் தொடர்ச்சியாக நடாத்தப்பட்டு வருவதனால் அந்தரங்கமுடைய குறித்த கடமைகளை ஆற்ற தேர்ச்சி பெற்ற பொறுப்புவாய்ந்த வேறொரு உத்தியோகத்தருக்கு உடனடியாக கையளிக்க முடியாத காரணத்தினால் குறித்த உத்தியோகத்தரினை விடுவிக்க முடியவில்லை.	உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்
(ஒ)	2006 நவம்பர் 10 ஆம் திகதிய 06/2006 ஆம் இலக்க அரச பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் பிரிவு 08	குறித்த சுற்றறிக்கைக்கு அமைவாக பதவியுயர்விற்கான தரமும், சம்பள மீளமைப்பும் மேற்கொள்ளப்படாமல் 04 ஆய்வு உத்தியோகத்தர்களுக்கு சுற்றறிக்கைக்கு முரணான பதவியுயர்வுகள் வழங்கப்பட்டு சம்பளக்கொடுப்பனவுகள் மேலதிகமாக வழங்கப்பட்டிருந்தது.	பதில் வழங்கப்படவில்லை	சுற்றறிக்கை யுடன் இணங்குதல் வேண்டும்

(ஓ)	காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் 2020/6 இலக்க சுற்றுநிருபம்	காலாண்டு அடிப்படையில் குத்தகை அறவீடு செயற்பாட்டினை முன்னெடுப்பதற்கு நாளதுவரை கண்டாவளை காணி பிரிவில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	எதிர்வரும் காலத்தில் பதிவேடுகள் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பதிவேடுகள் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்
(ஔ)	நிதி அமைச்சின் அரச சுற்றுநிருப இல. 1/2020 இன் 28.08.2020 ஆம் திகதிய நிதி ஒழுங்கு விதி 371 (5)	உபநிமித்த உப கட்டுநிதி பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ஒரு தடவையில் ரூபா 100,000 வரை வழங்க கூடியதாக இருந்தும் பதவி நிலையில்லாத உத்தியோகத்தருக்கு விளையாட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்தது.	இனிவரும் காலங்களில் பதவிநிலை உத்தியோகத்தருக்கு மட்டும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது .	சுற்றறிக்கை யுடன் இணங்குதல் வேண்டும்
(∴)	2011 ஆம் ஆண்டின் 31 இலக்க மற்றும் 1994 ஆண்டின் 6 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பூச்சிகொல்லிகள் மருந்துகளின் கட்டுபாட்டு சட்டத்தின் 21 (அ)	விவசாய பணிப்பாளர் நாயகம் அவர்களினால் நியமிக்கப்பட்ட அதிகாரியால் வழங்கப்பட்ட சான்றிதழ் வைத்திருக்கும் நபர் தவிர எந்தவொரு நபரும் பூச்சி கொல்லி மருந்து விற்பனை செய்ய தடைசெய்யப்பட்டிருந்தும் மாகாணத்தில் அனுமதி பெறாதவர்கள் விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டிருந்தது.	ஆளணி பற்றாக்குறை நிலவுவதன் காரணமாக கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது. எனினும் சட்ட நடவடிக்கைக்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.	மேற்பார்வை செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்

1.5.2 தலைப்பு – 400 - ஆளுநர் செயலகம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபார்சுகள்
2021-2024 வரையான ஆண்டுகளில் வடக்கு மாகாண ஆளுநர்கள் தங்களது எரிபொருள் படியை காசாக பெற்றுக்கொள்ளாது எரிபொருள் கட்டளைகள் மூலம் பெற்றுக்கொண்டமையால் அவ்வாறு பெற்றுக்கொண்ட நிதி நன்மைகளில் இருந்து அரசிற்கு செலுத்த வேண்டிய வரி வருமானம் இல்லாமல் செய்யப்பட்டிருந்தது.	2021-2024 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கௌரவ ஆளுநர் அவர்களது அறிவுறுத்தலுக்கு அமைவாக குறித்தொதுக்கப்பட்டுள்ள ஒரு வாகனத்திற்கு எரிபொருள் படி வழங்கப்படாது எரிபொருள் கட்டளை மூலம் எரிபொருள் நிரப்பப்பட்டது.	சட்டஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும்

1.5.3 தலைப்பு – 401 - மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	2024 ஆம் ஆண்டிற்கான பரீட்சை அட்டவணைக்கமைவாக மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் திட்டமிடப்பட்ட 48 பரீட்சைகளில் 18 வினைத்திறமைகாண் 02 பதவியுயர்வு மற்றும் 04 ஆட்சேர்ப்பு பரீட்சைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.	மண்டப வசதியின்மையால் காலதாமதமாக நடாத்தப்பட்டுள்ளதுடன் பதவியுயர்வுப் பரீட்சைகள் தகைமைக் குறைபாடு மற்றும் சேவைப்பிரமாணக்குறிப்பு திருத்தம் காரணமாக நடாத்தப்படாததுடன் தற்போது நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	பரீட்சை அட்டவணைக்கமைய செயற்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்
(ஆ)	05.05.2021 ஆம் திகதிய பிரதம செயலாளருக்கு முகவரியிடப்பட்ட தேசிய சம்பள ஆணைக்குழு சிபாரிசுக் கடிதத்தில் குறிப்பிட்ட ஆய்வு உத்தியோகத்தருக்கு 10 வருட சேவைக்காலத்தின் பின் ஆய்வு உத்தியோகத்தர் தரம் I இற்கு பதவியுயர்வு செய்வது எதிர்மறையான தாக்கத்தினை முழு அரச மற்றும் மாகாண சேவைகளுக்கு ஏற்படுத்தும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் அதனைக் கருத்திற் கொள்ளாது குறித்த உள்ளுராட்சி அமைச்சின் செயலாளரின் சிபாரிசுடன் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் தரம் I இற்கு ரூபா 748,562 உடனான சம்பள அதிகரிப்புடன் தவறான பதவியுயர்வு வழங்கப்பட்டிருந்தது.	ஆய்வு உத்தியோகத்தரின் பதவியுயர்வின் போது ஏற்கனவே வடக்கு மாகாண பிரதம செயலாளருக்கு இணைப்பு I மற்றும் இணைப்பு II கடிதம் மூலம் வழங்கியிருந்த அறிவுறுத்தலை மறைத்து தேசிய சம்பளங்கள் ஆணைக்குழுவினை தவறாக வழிநடாத்தி NSCC/12/74/6/SA இலக்க 05.05.2021 ஆம் திகதிய கடிதம் சம்பளங்கள் ஆணைக்குழுவிலிருந்து பெறப்பட்டுள்ளது.	ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்

1.5.4 தலைப்பு – 411 - மாகாண விவசாய அமைச்சு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	மீளாய்வாண்டில் கூட்டுமொத்தம் ரூபா 13,538,245 பெறுமதிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட வேலைத்திட்டமானது கணக்காய்வுத் திகதி வரை கூட்டுமொத்தம் ரூபா 5,411,837 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதிவரை குறித்த வேலைத்திட்டமானது மாகாண விவசாய அமைச்சினால் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.	இவ்வருடத்தின் யூன் மாதத்திற்குள் பூர்த்திசெய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	வேலைகள் உரிய காலப்பகுதியில் பூரணப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்

(ஆ) மீளாய்வாண்டில் கூட்டுமொத்தம் ரூபா 48,370,000 பெறுமதிக்கு பண்ணை முகாமையாளர் விடுதி திருத்தம் என்ற பெயரில் திணைக்களம் ஒன்றின் தலைமையலுவலக கட்டிடத் தொகுதி போன்ற வரைபடத்தின் பிரகாரம் அலுவலகக் கட்டடமாக மாகாண விவசாய அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றமை சர்ச்சைக்குரிய விடயமாக அவதானிக்கப்பட்டுள்ளது.	பாரம்பரிய கட்டிடமாக காணப்படுகின்றமையால் நவீன வசதிகளுடன் கூடியதாக குறித்த கட்டுமாணவேலைத் திட்டமானது ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவருகின்றது.	உரிய அனுமதிக்கமைய நிர்மானிக்கப்படல் வேண்டும்

1.5.5 தலைப்பு – 412 - மாகாண கல்வி அமைச்சு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபார்சுகள்
மாகாண கல்வி அமைச்சினால் மின்பிறப்பாக்கி ஒன்று 30 ஒக்டோபர் 2018 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இதற்கு முழுமையாக மூன்று வருடங்கள் விற்பனையின் பின்னரான சேவையும் வழங்கப்பட்டிருந்தும் இவ்வியந்திரம் பொருத்தமற்ற இடம் மற்றும் போதிய காற்றோட்டமின்மை காரணமாக 2023 ஜனவரி மாதம் பழுதடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டில் புதிய இயந்திரம் ரூபா. 2,551,012 பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.	புதிய இயந்திரம் பழைய கட்டத்திலேயே பொருத்தப்பட்டிருப்பினும் விசாரணைக் குழவின் அறிக்கையின் பிரகாரம் ATS தொகுதி பௌதீகக் காரணிகளிடமிருந்து பாதுகாப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.	சொத்துக்களின் பாதுகாப்பு தன்மையை உறுதிப்படுத்தப்படல் வேண்டும்

1.5.6 தலைப்பு – 413 - மாகாண சுகாதார அமைச்சு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபார்சுகள்
சுகாதார அமைச்சினால் மீளாய்வாண்டில் 53 எண்ணிக்கையான சுகாதார திணைக்களத்திற்கு ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்பட்ட போதும் சுதேச மருத்துவ திணைக்களத்தில் காணப்படுகின்ற 224 எண்ணிக்கையான சிரேஸ்ட மட்ட, ஆரம்ப மட்ட மற்றும் இரண்டாம் மட்ட ஆளணிகள் தொடர்பிலும் சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்தில் காணப்படுகின்ற 113 எண்ணிக்கையான திணைக்கள ஆளணி வெற்றிடம் நிரப்புவது தொடர்பில் அமைச்சினால் போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தற்போது மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அனுமதிகள் கிடைக்கப் பெற்றுள்ளமையால் ஏற்கனவே வெவ்வேறு பதவிகளில் கடமையாற்றுபவர்களிலிருந்து மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பினை செய்ய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.	ஆளணியினரின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்

1.5.7 தலைப்பு – 425 - மாகாண இறைவரித் திணைக்களம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபார்சுகள்
04 அரசிறை விடயங்களுக்கான வருமான மதிப்பீட்டின் கூட்டுமொத்தம் ரூபா 3,350,000 கடந்த வருட மதிப்பீட்டுடன் ஒப்பிடும் போது மாறாநிலையில் காணப்படுகின்ற போதிலும் குறித்த அரசிறை விடயங்களில் 17 தொடக்கம் 65 சதவீத விலகல் காணப்படுகின்றமையானது வருமான மதிப்பீடானது வருமான மூலங்களை அடிப்படையாகக் கொண்டு வினைத்திறனான முறையில் மாகாண இறைவரித் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டிருக்காமையை வெளிப்படுத்துகின்றது.	இவை பிரதேச செயலகங்களால் சேகரிக்கப்பட்டே எமக்கு அனுப்பிவைக்கப்படுகின்றது. கனிப்பொருள் வரி விற்பனைப்புரள்வின் அடிப்படையிலேயே சேகரிக்கப்படுகின்றது.	சரியான மதிப்பீடு செய்யப்படல் வேண்டும்

1.5.8 தலைப்பு – 430 - மாகாண கட்டடங்கள் திணைக்களம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபார்சுகள்
கட்டடங்கள் திணைக்களத்தின் பிரதம மற்றும் நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகம், வவுனியாவிற்குச் சொந்தமான ரூபா 6,869,000 பெறுமதியான 3 எண்ணிக்கையான ஓய்வுவிடுதிகள் பயன்படுத்தப்படாமல் காணப்படுவதுடன் ரூபா 4,200,000 பெறுமதியான நிறைவேற்று பொறியியலாளர் ஓய்வுவிடுதி ஒன்றும் திருத்தம் செய்யப்படாமல் காணப்படுகின்றது.	விரைவில் அலுவலரை வாடகைக்கமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.	விடுதிகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்

1.5.9 தலைப்பு – 431 - மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் 02 எண்ணிக்கையான செயற்திட்டங்கள் ரூபா 20.5 மில்லியன் பெறுமதியில் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1.3 மில்லியன் செலவினமே மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் செயற்திட்டங்கள் நிறைவேற்றப்படாது கைவிடப்பட்டிருந்தது.	வேலை குளத்தின் நீர் மட்டம் குறைவடையாதும் பருவமழை பெய்தமையாலும் வேலை இடை நிறுத்தப்பட்டு ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டது. மேலும் இவ் வருட ஒதுக்கீடுகளில் முறையாக வேலைகள் செய்யப்படவுள்ளது.	செயற்றிட்டங்களை முழுமையாக பூரணப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

(ஆ)	நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மன்னார் கூராய் குள வேலைத்திட்டத்தில் கூட்டுமொத்தம் ரூபா 10,832,130 பெறுமதியான குளக்கட்டு புனரமைப்பு மற்றும் புல்பதித்தல் வேலையானது புற்கள் பதித்தல் சரியான முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் குளக்கட்டும் மழை வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு சேதமடைந்திருந்தது.	குளக்கட்டினூடான கனரகவாகனங்களின் போக்கு வரத்தானது தடைசெய்யப்பட்டிருந்த போதும் எமது தடைகளை மீறி குளக்கட்டினூடாக கனரகவாகனங்கள் சென்றமையாலே இவ்வாறான நிலைமை ஏற்பட்டது. இவையும் பிடிபண காலப்பகுதிக்குள் சீர்செய்யப்படும்.	உரிய தரத்தில் நிர்மானிக்கப்படுவது உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
(இ)	வன்னேரிக்குளத்தின் ஊடாக நீர்ப்பாசனம் வழங்கப்பட்டு 240 ஏக்கர் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் 800 ஏக்கருக்கு சிறுபோகம் செய்வதற்கு ஏற்ற வகையில் புனரமைப்பு வேலைத்திட்டதில் ரூபா 93.66 மில்லியன் செலவிடப்பட்டிருந்தும் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய காலம் முடிவடைந்தும் வேலை நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் குறித்த செயற்திட்டத்தின் ஊடாக உரிய பயனைப் பெற்றுக்கொள்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தேவன்கட்டு குளமானது பனிக்கந்தமடு ஒதுக்கப்பட்ட காட்டினுள் அமைந்துள்ளதால் வனவளத்திணைக்களத்தின் இடையூறாக காணப்படுகின்றது. திட்டத்தால் அனுமதி பெற்றுத்தரும் பட்சத்தில் அவ்வேலைகள் அனைத்தையும் திட்டமிட்டவாறு பூரணப்படுத்த முடியும் என்பதை தெரியப்படுத்த விரும்புகிறேன்.	வேலைகள் உரிய காலப்பகுதியில் பூரணப்படுத்தப்பட்டு பயனைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்
(ஈ)	கல்மடு குள அணைக்கட்டிற்கான கலிங்கு வேலைத்திட்டம் மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்காமையால் ரூபா 522.82 மில்லியன் பெறுமதி செலவு செய்யப்பட்டிருந்தும் மேலதிகமாக மழை நீரை சேமிக்க முடியாதிருந்தது.	குளத்தின் நீர்க்கொள்ளவை அதிகரிப்பதற்கு வனவளத் திணைக்களத்தின் அனுமதிக்கு விண்ணப்பிக்கப் பட்டுள்ளது	வேலைத்திட்டத்தின் ஊடாக உரிய பயனைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்
(உ)	15 ஒப்பந்த வேலைகளுக்கான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) கூட்டுமொத்தம் ரூபா 2,507,342 கொடுப்பனவுகள் கடந்த 5 மாதங்கள் தொடக்கம் 2 வருட காலமாக மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படாது வைப்புக்கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது.	அரசவருமானமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்

1.5.10 தலைப்பு – 432 - வீதி அபிவிருத்தித் திணைக்களம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	உலக-வங்கியின் நிதித் திட்டத்தின் கீழ் கொவிட்-19 அவசர நிலைமைகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட களஞ்சிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டம் 2021 இல்	தற்போது கட்டடத்தில் மேலதிக சிலவேலைகள் இடம்பெற்று வருகின்றது. இவை முற்றுப் பெற்றதும். உரிய நோக்கத்திற்கு பயன்படுத்துவதற்குரிய	குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்

	முழங்காவில் மற்றும் புன்னைநீராவி பிரதேசங்களில் கட்டமைக்கப்பட்ட தானிய களஞ்சியங்களின் கட்டுமான வேலைகள் பூரணப்படுத்தப்பட்டு பிரதி மாகாண பணிப்பாளர் பணிமனை கிளிநொச்சிக்கு கையளிக்கப்பட்டு 16 மாதங்களிற்கு பின்பே களஞ்சியமானது விதை உற்பத்தியாளர் சங்கங்களுக்கு கையளிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளாகியும் நாளதுவரை நிர்மாணிக்கப்பட்ட நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாமல் உள்ளது.	நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	
(ஆ)	நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி திணைக்களம் கிளிநொச்சியில் காணப்படுகின்ற முற்பண முயற்சிக்கணக்கின் ரூபா 2,266,000 பெறுமதியான எயார் கொம்பிரசர் மற்றும் ரூபா 216,332 பெறுமதியான பிளேட் கெம்பக்டர் திருத்தம் செய்யப்பட வேண்டியிருந்தும் மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இவ்வியந்திர சாதனங்களை மீளவும் ஏலவிற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் எம்மால் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.	திருத்தம் செய்யப்பட்டு பயன்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்
(இ)	மீளாய்வாண்டில் கூட்டுமொத்தம் ரூபா 397,450,361 பெறுமதியான மூலதனவேலைகள் வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் வட மாகாணத்தில் 2024 ஆண்டிற்கான வேலை ஒப்பந்த வழங்குநர் பட்டியலில் பதிவு செய்யப்படாத முன்னைய வேலை அனுபவங்களை கவனத்தில் கொள்ளாது ஒப்பந்ததாரர்களை தெரிவு செய்து நிறைவேற்றப்பட்டுள்ளது.	2.14.1 வழிகாட்டி 3.4 இல் கூறப்பட்ட முன்னைய செயலாற்றலை கருத்திற்கொண்டே வழங்கப்பட்டது. இருப்பினும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்கள் கருத்தில்கொள்ளப்பட்டு இனிவரும் காலங்களில் பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	வழங்குநர் பட்டியலில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்
(ஈ)	மீளாய்வாண்டில் வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் 02 எண்ணிக்கையான கூட்டுமொத்தம் ரூபா 24.91 மில்லியன் பெறுமதியான புதிய மூலதனவேலைகளுக்கு பெறுகை நடைமுறைக்கு முரணாக வாங்குதல் முறையில் விலைமனுக்கள் வழங்கப்பட்டு ஒப்பந்ததாரர் தெரிவு செய்யப்பட்டு வேலைகள் நிறைவேற்றப்பட்டிருந்தது.	குறுகிய காலத்தில் இதுவரை காலமும் எமது திணைக்களத்தில் வேலைகளை வினைத்திறனாக செய்து முடித்த தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் ஊடாக கேள்வி கோரப்பட்டு வேலைகளை உரிய முறையில் நிறைவு செய்யப்பட்டது	பெறுகை நடைமுறையின் பிரகாரம் செயற்படல் வேண்டும்.
(உ)	பெறுகை வழிகாட்டி குறிப்பு 2.14.1 இல் குறிப்பிடப்பட்ட கடந்த கால ஒப்பந்தத்தின் வேலை நிறைவேற்றுகையின் மதிப்பீடுகளை கவனத்தில் கொள்ளப்பட்டதற்கு ஆவண சான்றுகளின்றி ஒரே தினத்தில் 5 எண்ணிக்கையான 80 மில்லியன் பெறுமதியான வீதி பராமரிப்பு வேலைகளுக்கு திணைக்களத்தின் சுய விருப்பில் 5 வேலைகளுக்கும் 5 எண்ணிக்கையான	வவுனியாவின் கீழ் அதிகளவான வேலைகள் மேற்கொண்ட மற்றும் நல்ல செயலாற்றுகையினை வெளிப்படுத்திய 06 ஒப்பந்தகாரருக்கு வாங்குதல் முறையில் உரிய நிலை அனுமதிகளுடன் விலைமனுக்கள் கோரப்பட்டு ஒப்பந்தகாரர்களின் விலைமனுக்கள்	பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் செயற்படல் வேண்டும்

	வழங்குநர்களிடம் மட்டும் வாங்குதல் முறையில் விலை மனுக்கள் கோரப்பட்டு வேலைகள் பகிர்ந்து அளிக்கப்பட்டிருந்தது.	பரிசீலிக்கப்பட்டு குறைந்த கேள்விதாரர் தெரிவு செய்யப்பட்டனர்.	
(ஊ)	வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் கறுக்காய்தீவு காவைக்குளம் வீதி பராமரிப்பு வேலை தொடர்பாக குறித்த வேலைத்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட விலை கேள்விதாரரின் விலைக்கேள்வியானது ரூபா 1,617,081 ஆன கூட்டுதொகையால் இரண்டு தடவைகள் மோசடித் தன்மை நோக்குடன் வெட்டி திருத்தப்பட்டிருந்தது.	பதில் தரப்பட்டிருக்கவில்லை	விலைக்கேள்வி மாற்றம் தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்
(எ)	வீதி அபிவிருத்தி திணைக்களத்தில் 09 எண்ணிக்கையான உத்தியோகத்தர் விடுதிகள் கூட்டுமொத்தம் ரூபா 21,498,610 பெறுமதியானவை பயன்படுத்தப்படாது காணப்படுவதோடு பிரதம பொறியியலாளர் அலுவலகம், வவுனியாவில் உள்ள ரூபா 1,294,609 பெறுமதியான உத்தியோகத்தர் விடுதி இல 9B திருத்தம் செய்யப்படாது பாவனையற்று 5 வருடங்களுக்கு மேல் காணப்படுகின்றது.	பிரதம பொறியியலாளர் அலுவலகம், வவுனியா விடுதிஇலக்கம் - 11 பாவனைக்கு உகந்த நிலையில் இல்லாமையினால் வழங்கமுடியாதுள்ளது.	சொத்துக்களை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்

1.5.11 தலைப்பு – 441 - மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	2019 ஆம் ஆண்டு மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதி (PSDG) ரூபா 17,138,008 செலவில் அமைக்கப்பட்ட மன்னார் பாதுகாப்பு இல்லம் கடந்த 03 ஆண்டுகளாக பயன்படுத்தப்படாது குறித்த கட்டடத்திற்குரிய பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான சம்பளமாக கூட்டுமொத்தம் ரூபா 1,641,460 மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளது.	பதில் தரப்பட்டிருக்கவில்லை	கட்டடங்களை பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்
(ஆ)	மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் அச்சுவேலி சான்று பெற்ற பாடசாலையில் காணாமல் போன ரூபா 220,500 மற்றும் ரூபா 106,360 பெறுமதியான கணனி தொகுதி இழப்பு மற்றும் ரூபா. 523,139 சேதம் ஏற்பட்டமை தொடர்பாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் கிடைக்கப்பெற்றதன் பின்னர் குறித்த சொத்து இழப்பு தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	இழப்புக்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்

1.5.12 தலைப்பு – 450 - மாகாண சுகாதாரத் திணைக்களம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	வடமாகாணத்தின் வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவில் HHIMS முறைமையை நடைமுறைப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட உபகரணங்களை பயன்படுத்தி 6 எண்ணிக்கையான வைத்தியசாலைகளில் குறித்த முறைமை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் வட மாகாணத்தின் ஏனைய மாவட்ட மற்றும் தள வைத்தியசாலைகளில் குறித்த நோக்கத்திற்கு வழங்கப்பட்ட உபகரணங்கள் பயன்படுத்தப்படாமல் உள்ளதுடன் அனைத்து சுகாதார நிறுவனங்களிலும் கணணிமயப்படுத்தப்பட்ட சுகாதார தகவல் அமைப்பை விரிவுபடுத்தல் முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	குறித்த மென்பொருள் பயன்படுத்துவதற்கு ஆளணிபற்றாக்குறை பெருமளவில் நிலவுவதனால் ஆளணிகளை நிரப்ப கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	கணணிமயப்படுத்தப்பட்ட சுகாதார தகவல் அமைப்பை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்
(ஆ)	மீளாய்வாண்டில் கிளிநொச்சி வைத்தியசாலையின் இழையவியல் வைத்திய நிபுணராக கடமையாற்றிய வைத்தியர் வெளிநாட்டு கற்கை நெறியை தொடர்வதற்காக சென்றமையால் குறித்த வைத்தியசாலையின் இழையவியல் பகுப்பாய்வை உரிய காலப்பகுதியில் 366 எண்ணிக்கையான Histopathology மாதிரிகளும் 54 எண்ணிக்கையான cytology மாதிரிகளும் பரிசோதனை மேற்கொள்ளப்படாது நோயாளர்களுக்கு உரிய சிகிச்சைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.	குறித்த வைத்திய நிபுணர் வெளிநாடு சென்றதால் பகுப்பாய்வு செய்யப்படாது காணப்பட்ட மாதிரிகள் தற்போது மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு பரிசோதனை செய்யப்படுகின்றது என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.	நோயாளர்களுக்கு சிகிச்சைகள் தொடர்நது வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	மாகாண சாரதி சேவை உத்தியோகத்தர்களில் சுகாதாரத்துறையுடன் நீண்டகாலம் கடமையாற்றி கடந்த 03 ஆண்டு இடமாற்ற கட்டளைகளில் இடமாற்றப்பட்டிருந்தும் வருடாந்த இடமாற்றக்கட்டளையின் அடிப்படையில் விடுவிக்கப்பட தவறியிருந்தது.	விரைவில் விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.	வருடாந்த இடமாற்றக்கட்டளையின் பிரகாரம் செயற்படல் வேண்டும்

(ஈ)	நுண்ணுயிரியல் வைத்திய நிபுணர் ஒரு வருடத்திற்கு மேலாக கிளிநொச்சி வைத்தியசாலையில் பணியாற்றிவரும் போதும் குறித்த வைத்திய நிபுணருக்கு குறிப்பிட்ட காலப்பகுதியில் ரூபா 1,348,938 வழங்கப்பட்ட போதும் குறித்த பரிசோதனைகளுக்காக பெறப்படுகின்ற மாதிரிகள் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்படுகின்றது.	நுண்ணுயிரியல் வைத்திய நிபுணர் தற்போது இடமாற்றம் பெற்று மொனராகலை வைத்தியசாலைக்குச் சென்றுள்ள நிலையில் தற்போதுவரையில் மாதிரிகள் யாழ்ப்பாணத்திற்கே அனுப்பி வைக்கப்படுகின்றது.	நுண்ணுயிரியல் ஆய்வுகூடம் இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(உ)	வவுனியா மாவட்டத்தின் பிரதேச மற்றும் ஆதார வைத்தியசாலை, கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை மற்றும் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவில் மருந்துச் சிட்டைகளில் மருத்துவர்களினால் நாளாந்தம் ஓர் தொகுதி சிட்டைகள் கையெழுத்திடாது மருந்துகள் வழங்கப்பட்டிருந்தது.	பெருமளவு நோயாளர்கள் மருத்துவ சிகிச்சை மற்றும் ஆலோசனைக்காக வருவதாலும் மற்றும் மருத்துவ அதிகாரிகளால் தவறுதலாகவும் வெளிநோயாளர் மருந்துச்சீட்டையில் கையொப்பமிடப்படவில்லை. எதிர்வரும் காலத்தில் தவறாது கையொப்பம் இடப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.	மருந்துச் சிட்டைகளில் மருத்துவர்களினால் கையொப்பமிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஊ)	2022 ஜனவரி 04 ஆம் திகதி அமுலுக்குவரும் வகையில் ஓமந்தை வைத்தியசாலை C வகை பிரதேச வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டிருந்தும் மீளாய்வாண்டு இறுதிவரை குறித்த தரத்திலான பிரதேச வைத்தியசாலையாக இயங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பிரதேச வைத்தியசாலையாக இயங்குவதற்குரிய ஆளணி மற்றும் உபகரணங்கள் மற்றும் அனைத்து வசதிகளும் கிடைக்கும் பட்சத்திலேயே குறித்த வைத்தியசாலையை பிரதேச வைத்தியசாலையாக இயங்க வைக்க முடியும் இதற்கான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது	பிரதேச வைத்தியசாலையாக இயங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்
(எ)	கடமை பட்டியலின் பிரகாரம் காலை 8 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை மூன்று வைத்திய உத்தியோகத்தர்கள் கடமையில் இருக்கவேண்டிய போதும் நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலையில் வைத்தியரொருவர் மட்டுமே கடமையில் இருந்ததுடன் நவ்வி- ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்தில் மேற்கொண்ட களப் பரீட்சிப்பின் போது வைத்தியர் மற்றும் மருந்து கலவையாளர் இருவரும் கடமையில் இருந்திருக்கவில்லை. அத்துடன் பூவரசம்குள பிரதேச வைத்தியசாலையிலும் பொறுப்பான பொறுப்பதிகாரி குறித்த நாளன்று கடமையில் இருந்திருக்கவில்லை.	களவிஜயத்தின்போது பொறுப்பு வைத்திய அதிகாரி மதிய உணவுக்காகவும் மருந்துக்கலவையாளர் அலுவலக நடவடிக்கைக்காக பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு சென்றமையால் கடமையில் இருந்திருக்கவில்லை.	கடமைப்பட்டியலின் பிரகாரம் செயற்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

(ஏ)	செட்டிகுளம், மல்லாவி ஆதார வைத்தியசாலைகள் மற்றும் அக்கராயன் பிரதேச வைத்தியசாலையிலும் மருந்து கலவையாளர்கள் மற்றும் மருந்தாளர்கள் கணக்காய்வு களப் பரீட்சிப்பின் போது கடமையில் இல்லாமை தொடர்பில் கணக்காய்வில் அறிக்கையிடப்பட்டிருந்தும் முகாமைத்துவத்தினால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஊழியர்களின் கடமை நேரம் தொடர்பாக கண்காணிப்பை மேற்கொள்ளும் படியும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் குறித்த மருந்துக் கலவையாளர் தற்போது வன்னேரிக்குளம் வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.	கடமையில் இல்லாமை தொடர்பில் முகாமையினால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்
(ஐ)	கிருஸ்ணபுரம் தொற்று நோய் வைத்தியசாலையில் கொரோனா காலப்பகுதியில் வழங்குனராக தெரிவு செய்யப்பட்டிருந்து சேவை வழங்காது ரூபா 1,973,028 மேலதிக கொடுப்பனவு பெற்றிருந்த பொருள் வழங்குனரின் மீது நடவடிக்கை எடுக்காமல் தற்போதும் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை ஆளுகைக்கு உட்பட்ட வைத்தியசாலைகளுக்கு சமைத்த உணவு மற்றும் மாவட்ட உலர் உணவு வழங்குனராக தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.	2025/2026 ஆம் ஆண்டிற்காக தேசிய போட்டிக் கேள்வி முறையின் மூலம் கேள்வி கோரப்பட்டதுடன் எமது பெறுகை ஆவணத்தில் கோரப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய தகுதியான வழங்குனர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.	விசாரணையின் பின்னரான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(ஒ)	கிளிநொச்சி வைத்தியசாலையில் ஸ்கானிங் பிரிவில் உள்ள இயந்திரம் நாளதுவரை திருத்தம் செய்யப்பட்டிருக்காமையினால் குறித்த சேவையினை பெற்றுக்கொள்ள செல்பவர்கள் உரிய சேவையினை பெற்றுக்கொள்ள முடியாமலுள்ளது.	இயந்திரமானது இரண்டு வருடமாக திருத்தம் மேற்கொள்ளப்படாததால் உரிய கம்பனிக்கு குறித்த இயந்திரத்தை பரீட்சித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.	திருத்தம் செய்யப்பட்டு பயன்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்

1.5.13 தலைப்பு – 451 – சுதேச மருத்துவத் திணைக்களம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபார்சுகள்
சுதேச மருந்து உற்பத்திப் பிரிவு, அச்சுவேலியினால் உற்பத்தி செய்யப்படுகின்ற 79 வகையான மருந்து பொருட்கள் உற்பத்தியை மேற்கொள்வதற்கும் அதன் உற்பத்தி இயலளவை அதிகரிப்பதற்கு தேவையான இயந்திர உபகரணங்களை பெற்றுக் கொடுக்க சுகாதார அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அச்சுவேலி மருந்து உற்பத்திபிரிவுக்கு தேவையான இயந்திர உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக 2025ம் ஆண்டுக்கான PSDG கருத்திட்டத்தில் 30 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.	மருந்து உற்பத்திக்கு தேவையான இயந்திர உபகரணங்களை கொள்வனவு செய்து உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

1.5.14 **தலைப்பு – 460 - மாகாண கல்வித் திணைக்களம்**

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	மு/விசுவமடு மகா வித்தியாலயத்தில் பணியாற்றிய ஆங்கிலப்பாட ஆசிரியர் மீது ஆளுநரால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்ட நிலையில் மாகாணப் பணிப்பாளரினால் முல்லைத்தீவு வலய கல்விப்பணிப்பாளரூடாக இடமாற்றம் வழங்கிய போது இடமாற்றத்தை ஏற்காது பல தடவைகள் தற்காலிக இணைப்பில் யாழ்ப்பாணத்தில் சேவையாற்றி இணைப்புக்காலம் முடிவடைந்தும் தனது சேவை நிலையத்திற்கு அறிக்கையிடப்படாத போது பதவி வறிதாக்கப்பட்டிருந்தார். சேவை வறிதாக்கப்பட்ட காலப்பகுதிக்காக ரூபா 247,340 தவறாக கொடுக்கப்பட்டிருந்தது.	தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XII இன் 8.2 இற்கு அமைவாக அவரது திரண்ட லீவுகளிலிருந்து சீர்செய்யப்பட்டு (லீவு பெற்றுக்கொண்ட வருடத்தினதும் அதற்கு முந்திய வருடத்தினதும் மீதமாகவுள்ள ஓய்வு லீவு) காலங்கடந்த விடுமுறைகள் சீர்செய்யப்படடு மேற்படி ஆசிரியருக்கு சம்பள நிலுவையாக ரூபா 247,340 வழங்கப்பட்டது.	தாபன விதிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	யா/ ஹாட்லி கல்லூரி இடைநிலை வகுப்புகளிற்கான மாணவர் அனுமதியின் போது பாடசாலை அருகிலுள்ள மாணவர்களுக்கான முன்னுரிமையளிப்பு தொடர்பாக கல்வி அமைச்சின் 17/2023 ஆம் இலக்க சுற்றுநிருப ஏற்பாடுகள் அதிபரால் பின்பற்றப்படாதிருந்தது.	கல்வி அமைச்சின் 17/2023 ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கமைய பாடசாலை அனுமதிகளை மேற்கொள்ளுமாறு பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	சுற்றுநிருபத்தின் பிரகாரம் செயற்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்
(இ)	யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையின் மாணவர் அரச போஷாக்கு செயற்திட்டத்தில் ஒப்பந்ததாரருக்கு 2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொடுக்கப்பட்ட மேலதிக கொடுப்பனவு ரூபா 2,344,000 மீள அறவிடப்பட்டிருக்காததுடன் அக்காலத்திற்கு பின்னரான மேலதிக கொடுப்பனவுகளும் இனம்காணப்பட்டு மீள அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நட்டத்தின் பெறுமதி ரூபா 500,000 மேலதிகமாகக் காணப்பட்டமையினால் பிரதம செயலாளரினால் நட்ட மதிப்பீட்டுக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.	மேலதிக கொடுப்பனவுகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்
(ஈ)	மாகாண பாடசாலைகளில் மாதிரிக் கணக்காய்வினை மேற்கொண்ட போது 06 கல்வி வலயங்களிற்குட்பட்ட பாடசாலைகளில் யுத்தம், களவு போன்ற காரணங்களினால் ஏற்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 5,528,950 இழப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் படியான தொடர்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு 01 தொடக்கம் 28	களவு போன்ற காரணங்களினால் ஏற்பட்ட இழப்பு தொடர்பான விசாரணைக்குழு அமைக்கப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும்

	வருட காலமாக சீராக்கங்களை மேற்கொள்ள எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.		
(உ)	துணுக்காய் கல்வி வலயத்தில் பணியாற்றிய ஆசிரியருக்கு மாகாண தொழிற் பயிற்சி இணைப்பாளர் பதவி 2019 முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன் இப்பதவிக்கு உரித்தான கடமைகளை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள் மீளாய்வாண்டு இறுதிவரை வலய கல்விப் பணிப்பாளரிடம் மீள கையளிக்கப்பட்டிருக்கவில்லை.	இப்பயிற்சி நிலையத்தில் பணியாற்றிய ஆசிரியர் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளபோதும்,இதுவரை பொறுப்புக்களை கையளிக்கவில்லை. பலமுறை தெரியப்படுத்தியும் அவர் அதற்கு முன்வரவில்லை.	மீளப்பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்
(ஊ)	வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை விதிக்கோவை VIII பிரிவு 203 இன் பிரகாரம் 22 எண்ணிக்கையான கல்வி சார் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் வருடாந்த இடமாற்றத்தைப் பெற்றிருந்தும் ஒரு வருட காலத்திற்கு மேலாக இடமாற்றம் பெற்ற கடமை நிலையத்தில் கடமையை பொறுப்பேற்றிருக்கவில்லை.	**தென்மராட்சி** பதவியில் உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஏனைய அலுவலர்களுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. **வலிகாமம்** உயர் தர பெறுபேற்று சான்றிதழில் உள்ள பெயர் மாற்றம், பட்ட பெறுபேற்று சான்றிதழ் உறுதிப்படுத்தல் கிடைக்கவில்லை **முல்லைத்தீவு** புரணப்படுத்தப்பட்டு ஆவணங்கள் சமர்பிக்குமிடத்து பதவியில் உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்	இடமாற்றம் பெற்ற கடமை நிலையத்தில் கடமையை பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்
(எ)	பெறுகை வழிகாட்டி நெறி பிரிவு 8.9.1 மற்றும் 8.9.3 இற்கு அமைவாக இரண்டாம்நிலை பாடசாலைகளிற்கான கணித கருவிகளினை கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,136,000 பெறுமதிக்கும் மற்றும் 230 எண்ணிக்கையான வெளிவாரி இணைப்புக்களினை கொள்வனவு செய்வதற்காக ரூபா 3,910,000 பெறுமதிக்கும் ஒப்பந்த அளிப்பு மாகாண கல்வித் திணைக்களத்தினால் ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	வழங்குனர்கள் பொருட்களினை வழங்குவதற்கு தயார் நிலையிலிருந்த காரணத்தினாலும் குறித்த வழங்குனர்கள் பிணைமுறி வழங்கியிருந்தமையும் கருத்திற்கொண்டு பொருட்களை உடனடியாக எம்மால் கொள்வனவு செய்யப்பட்டு பரீட்சிக்கப்பட்டிருந்ததுடன் மேற்படி ஒப்பந்தம் மேற்கொள்ள தவறப்பட்டிருந்தது.	பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் செயற்படல் வேண்டும்

(ஏ)	துணுக்காய் மாகாண தொழில்நுட்ப பயிற்சி நிலையம் 06.10.2023 ஆம் திகதியிலிருந்து மீளாய்வாண்டு இறுதிவரை மூடப்பட்டிருந்ததனால் மாணவ தொழில்நுட்ப திறன் விருத்திக்காக அரச நிதி மூலம் கொள்வனவு செய்யப்பட்ட 323 எண்ணிக்கையான உபகரணங்கள் பயன்பாடின்றி விடப்பட்டிருந்தது.	இப்பயிற்சி நிலையத்தில் மாணவர்கள் பயிற்சிக்கு விண்ணப்பிக்காமையின் காரணத்தினால் தொடர்தும் இப்பயிற்சி நிலையம் மூடப்பட்டு இருக்கின்றது.	சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

1.5.15 தலைப்பு – 461 - மாகாண விளையாட்டுத் திணைக்களம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	2023 திசெம்பர் 04 ஆம் திகதி சங்கானை பூப்பந்தாட்ட உள்ளரங்க தேவைக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 684,000 பெறுமதியான பூப்பந்தாட்ட நிலவிரிப்பு கடந்த ஒரு வருட காலப்பகுதியாக மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் பயன்படுத்தப்படாமல் காணப்படுகின்றது.	எதிர்பாராத, அவசியமான திருத்த வேலைகள் மேற்கொள்ள வேண்டி இருந்தமையால் அவற்றை நிறைவு செய்த பின்னர் பயன்படுத்துவதற்காக வைக்கப்பட்டிருந்தது. தற்போது பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.	குறித்த தேவைக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்
(ஆ)	ரூபா 2,301,000 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட குத்துச்சண்டை உபகரணம் மீளாய்வாண்டு இறுதிவரை மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் முழுமையாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	பொருத்து வேலைகள் முடிவடைந்ததும் இலங்கை குத்துச்சண்டை சம்மேளனமிருந்தும் மதியுரை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மதியுரை கிடைக்கப்பெற்றதும் விரைவில் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	முழுமையாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்
(இ)	கிளி/தர்மபுரம் மத்திய கல்லூரியில் கூடைப்பந்தாட்ட திடலுக்காக 2017/2018 மற்றும் 2021/2022 ஆகிய காலப்பகுதிகளில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதி மூலம் ரூபா 3.3 மில்லியனில் அமைக்கப்பட்ட இத்திடலானது முறையான பாவனைக்கும் பராமரிப்பிற்கும் உட்படுத்தப்பட்டிருக்காது சுற்றுப்புற பாதுகாப்பு வேலிகள் எவையும் மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் அமைக்கப்பட்டிருக்கவில்லை.	பயிற்சி தொடர்பான அறிக்கைககள் சமர்ப்பிக்குமாறு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர், பயிற்றுநர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	முறையாக பயன்படுத்தப்படுவதுடன் பராமரிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும்

1.5.16 தலைப்பு – 470 - மாகாண உள்ளூராட்சித் திணைக்களம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	மாநகரசபையால் முன்னைய காலங்களில் நிலுவையாகவிடப்பட்டிருந்த வீதவரி மற்றும் ஏனைய வருமானங்கள் கூட்டுமொத்தம் ரூபா 210,946,322 அறவீடு மேற்கொள்ள ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	கடந்த வருடங்களில் நடமாடும் சேவைகள் நடாத்தப்பட்டு நிலுவைகள் அறவிடப்பட்டன.	நிலுவை வருமானங்களை அறவிட ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	மாநகரசபையினால் முன்னைய காலங்களில் வழங்கப்பட்ட முற்பணங்கள் கூட்டுமொத்தம் ரூபா 6,668,065 கடந்த 05 ஆண்டுகளாக தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அறவீடு செய்ய முடியாத மிகுதித் தொகையான ரூபா 5,294,066 ஆனது 1995 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட, ஆவணங்கள் காணப்படாத விபரங்கள் அறியப்படாத முற்பணங்களாகும். இவை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	முற்பணங்களை தீர்ப்பனவு செய்யப்படல் வேண்டும்

1.5.17 தலைப்பு – 471 - மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபார்சுகள்
கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக மக்களை கிராம மட்ட அமைப்புக்களுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தும் 2,525 சங்கங்களின் நடவடிக்கைகளை வினைத்திறனாக்க திணைக்களத்தினால் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2024, 2025ஆம் ஆண்டு மார்ச் வரையில் முறையே 260, 92 கிராம அபிவிருத்திச் சங்கங்களும் 374, 113 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் புதுப்பிக்கப்பட்டுள்ளதுடன். மேலும் 2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2025ஆம் ஆண்டு முதலாம் காலாண்டுப் பகுதியில் மிகக் கூடுதலான சங்கங்கள் புதுப்பிக்கப்பட்ட நிலையினையே காட்டுகின்றது.	கிராம மட்ட அமைப்புக்களை முன்னேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.5.18 தலைப்பு – 480 - மாகாண விவசாயத் திணைக்களம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	மாகாண விவசாயத் திணைக்களத்தின் வைப்புக்கணக்கில் உள்ள ILO திட்ட நிதி ரூபா 1,206,665 இனை உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாமல் அரச வருமானத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.	அனுமதிக்கப்பட்ட திட்டங்களின் பெரும்பகுதி நிறைவேற்றப்பட்டு மீதியாகக் காணப்பட்ட குறித்ததொகையினை பயன்படுத்தி வேறுதிட்ட முன்மொழிவுகளுக்கு பயன்படுத்த முடியாத காரணத்தினால் வருமானக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.	உரிய நோக்கத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

(ஆ)	கடந்த 01 தொடக்கம் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்திடம் காணப்படுகின்ற 22 எண்ணிக்கையான வாகனங்கள் திருத்தங்கள் மேற்கொள்ளாது பயன்பாடின்றி காணப்படுகிறது.	இவ் வருடம் திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.	திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் செயற்பாட்டில் ஈடுபடுத்தப்படும் 11 வாகனங்கள் பிரதம செயலாளருக்கு உரிமைப்படுத்தப்படாது வழங்கப்பட்ட நிறுவனங்களின் பெயரிலும், தனிநபரின் பெயரிலும் மற்றும் பதிவு செய்யப்படாமலும் காணப்படுகின்றன.	8 வாகனங்கள் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் ஒப்பம் பெறுவதற்காக ஆவணங்களும் பூர்த்தி செய்யப்பட்டு மாகாணபோக்குவரத்து திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பதிவுகள் ஏதும் அற்ற ஏனைய வாகனங்கள் மோட்டார் வாகன பரிசோதகர் வவுனியாவின் அறிவுறுத்தலுக்காக கோரிக்கை விடுத்துள்ளோம்.	உரிமை மாற்றம் செய்யப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.
(ஈ)	வவுனியா பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் காணாமல் போனமை மற்றும் யாழ்ப்பாணம் மாவட்ட விவசாயப்பயிற்சி நிலையத்தின் 282 எண்ணிக்கையான பொருட்கள் 25 வருடங்களிற்கு மேலாக தொலைந்தமை தொடர்பாக தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	யாழ் மாவட்டத்தில் 1995ம் ஆண்டு யுத்தத்தின்போது காணாமல்போன 280 எண்ணிக்கையான பொருட்களுக்கு பதிவழித்தலுக்குரிய ஆவணம் கிடைக்கப்பெற்றுள்ளது.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்
(உ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பெறுகை கைநூலின் 5.3.10 இன் பிரகாரம் ரூபா 2 மில்லியன் தொடக்கம் 5 மில்லியன் வரையான வேலைகளுக்கான விலைக்கேள்வியின் செல்லுபடியாகும் காலம் 63 நாட்களாக காணப்படுகின்ற போதும் யாழ் விவசாயத் திணைக்களத்தில் மதிப்பீட்டு கிரயம் ரூபா 3.6 மில்லியன் பெறுமதியான குறித்த வேலைத்திட்டத்திற்கு விலைக்கேள்வியின் செல்லுபடியாகும் காலம் அனுமதி பெறப்படாது 40 நாட்களாக குறைப்பு செய்யப்பட்டுள்ளதுடன் செயல் நிறைவேற்ற பிணைப் பொறுப்பு பெறப்படுவதற்கு முன்னரே 2023 நவம்பர் 29 ஆம் திகதியில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	இனிவரும் காலங்ளில் இவ்வாறான தவறுகள் ஏற்படாமல் தடுக்க பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும்.	பெறுகை கைநூலின் பிரகாரம செயற்படல் வேண்டும்.
(ஊ)	வருடாந்த மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் மூலம் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களின் கீழ் தேராவில்	முல்லைத்தீவு விவசாயிகளிற்கான பயிற்சி நிலையம் மற்றும் மன்னார் பயிற்சி அலுவலகத்தில் சூரிய	செயற்திட்டங்களின் மூலம் வருமானத்தை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல்

	பண்ணை, முல்லைத்தீவு விவசாயிகளிற்கான பயிற்சி நிலையம் மற்றும் மன்னார் பயிற்சி அலுவலகங்களில் மீளாய்வாண்டில் ரூபா 7,433,835 இற்கு பொருத்தப்பட்டிருக்க வேண்டிய சூரிய மின்கல தொகுதி கணக்காய்வு திகதி வரை பொருத்தப்பட்டு வருமானம் பெறப்பட்டிருக்கவில்லை.	மின்கலத்தொகுதிகள் பொருத்தப்பட்டுள்ள போதிலும் மின்சார சபையினரிடம் இணைப்பு கோரிக்கை விடுவிக்கப் பட்டுள்ளதுடன் மின்சாரசபையின் காலதாமதத்தினால் இணைப்பு ஏற்படுத்தப் பட்டிருக்கவில்லை. மேலும் தேராவில் பயிற்சி அலுவலகத்தின் சூரியமின்கலத்தொகுதி தற்பொழுது பாவனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.	வேண்டும்
(எ)	அரச விதையுற்பத்திப் பண்ணையின் ரூபா 2,767,000 பெறுமதியான 19 இயந்திரங்கள் பாவனையிலுள்ளதாக வெளிப்படுத்தப்பட்டிருப்பினும் கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது பாவனையற்றதாக காணப்பட்டிருந்தது.	இவ்வாண்டு PSDG திட்டத்தில் திருத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.	திருத்திப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்

1.5.19 தலைப்பு – 481 - மாகாண காணி ஆணையாளர் திணைக்களம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	காணி உரிமையை பெற்றுக்கொள்ளாது ரூபா 93,480,086 பெறுமதிக்கு மாகாண காணி ஆணையாளர் அலுவலக கட்டடம் அமைக்கப்பட்டிருந்தது.	காணி ஆணையாளர் நாயகத்தின் அனுமதிக்காக மாகாண காணி ஆணையாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.	காணி உரிமையினைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	கூட்டுமொத்தம் ரூபா 635,935 பெறுமதியான 13 டப்லெட்கள் களஞ்சிய அறையில் காணப்படுவதுடன் இவற்றை பயன்படுத்துவதற்கு வடக்கு மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தினால் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மேற்படி டப்லெட்கள் வேறு பொருத்தமான திணைக்களங்களுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.	சொத்துக்களை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்
(இ)	கூட்டுமொத்தம் ரூபா 2,035,700 பெறுமதியான 22 எண்ணிக்கையான மடிக்கணனிகள் களஞ்சிய அறையில் பயன்படுத்தப்படாது காணப்படுவதுடன் அலுவலகத்தில் பயன்படுத்தப்படாதிருந்த மடிக்கணனிகள் 39 ஏனைய அரச திணைக்களங்களுக்கு வழங்கப்பட்டிருந்த நிலையிலும் மீளாய்வாண்டில் 04 எண்ணிக்கையான மடிக்கணனிகள் கூட்டுமொத்தம் ரூபா 1,023,060 பெறுமதிக்கு வடக்கு மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.	E Slim, GPS என்பவற்றின் இற்றைவரைப்படுத்தப்பட்ட தொழில்நுட்ப பாவனைக்கு பொருத்தமற்றதாக காணப்படுவதனாலும் பழைய மடிக்கணனிகள் வேறு பொருத்தமான திணைக்களங்களுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது	சொத்துக்களை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்

(ஈ)	குடியேற்ற உத்தியோகத்தரின் ஆளணி எண்ணிக்கை பற்றாக்குறையாக காணப்படுகின்ற போதிலும் வடமாகாணத்தின் 05 மாவட்டங்களில் பயன்பாட்டில் உள்ள காணிகள் மற்றும் அபிவிருத்தியற்ற காணிகளின் நிறையளிப்பு அளவினை மற்றும் அனுமதிக்கப்பட்ட ஆளணியை அடிப்படையாகக்கொண்டு ஆளணியினர் பகிர்ந்தளிப்பு செய்யப்பட்டிருக்காது வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் 6 தொடக்கம் 19 வரையிலான ஆளணியினரின் தேவைப்பாடு காணப்படுகின்ற போதும் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு 7 தொடக்கம் 10 வரையிலான ஆளணியினர் கடமைத் தேவையற்ற நிலையில் மேலதிகமாக சேவையாற்ற அனுமதிக்கப்பட்டிருந்தது.	வருடாந்த இடமாற்றத்தின் போது மேலதிகமாக காணப்படும் ஆளணியினரை தேவையான இடங்களுக்கு இடமாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	மேலதிகமாக காணப்படும் ஆளணியினைரை இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்
(உ)	வடக்கு மாகாண அரச காணிகளை நீண்டகால குத்தகைக்கு வியாபார நோக்கங்களுக்கு வழங்கி அவர்கள் செயற்பட்டு வருமானம் உழைக்கும் நிலையில் 2019 தொடக்கம் 2025 ஏப்ரல் 16 திகதி வரையான காலப்பகுதிக்கு கூட்டுமொத்தம் ரூபா 20,195,120 குத்தகைகட்டண நிலுவைகள் திணைக்களத்தால் அறவீடு செய்யப்படாது நிலுவை வருமதியாக காணப்படுவதுடன் குத்தகைக்கட்டண நிலுவைகளை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வடக்கு மாகாண அரச காணிகளை நீண்டகால குத்தகை நிலுவையாக 31 திசெம்பர் 2024ல் காணப்பட்ட ரூபா 20,807,720 இல் 2025 வரை ரூபா 651,100 அறவீடு செய்யப்பட்டு மிகுதியான ரூபா 20,156,620 இனை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்

1.5.20 தலைப்பு – 482 - கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	அனிஞ்சயன்குள கால்நடை இனவிருத்தி பண்ணையில் ரூபா 1,706,157 பெறுமதியான பாலுற்பத்தி இயந்திரங்கள், மின்பிறப்பாக்கி மற்றும் இயந்திரங்கள் கடந்த 12 வருடங்களாக பயன்பாடின்றியும் பயன்பாட்டுக்குரிய நிலை காணப்படுகின்ற போதும் அரச வளங்களை வினைத்திறனுள்ள வகையில் பயன்படுத்த மாற்றுஒழுங்குகள் முழுமைப்படுத்தப்பட்டிருக்க வில்லை.	பிரதம செயலாளரால் அனுமதிக்கப்பட்டதற்கிணங்க தற்போது மீண்டும் மேற்படி அமைப்புக்களது தற்போதைய நிலைப்பாடு குறித்து அறிவதற்கான வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ளன. அவர்களது தீர்மானங்கள் கிடைக்கப்பெற்றதும் மேற்படி அமைப்புகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்

(ஆ)	இயந்திர உற்பத்தி அலகுக்கான அமைக்கப்பட்ட ரூபா 3,000,000 பெறுமதியான கட்டடமானது 11 வருடங்களாக பயன்பாடின்றி காணப்படுகின்றது.	அனிச்சியன்குளம் பால் பதனிடும் நிலையத்தின் கட்டடத்தினையும் மேற்படி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கத்திற்கே விடுவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.	பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்
(இ)	ரூபா 5,695,000 பெறுமதியான சிறிய கனரக லொறி மற்றும் புத்தகங்களிலிருந்து நீக்கப்பட்டிருந்த நான்கு சக்கர உழவு இயந்திரப்பெட்டி பண்ணையிலேயே பயன்பாடின்றி விடப்பட்டுள்ளது.	சாரதிகளின் பற்றாக்குறையினால் மேற்படி கனரக வாகனங்களை பயன்படுத்த முடியாதநிலை காணப்படுகின்றது. அனிஞ்சியன்குள கால்நடை இனவிருத்தி பண்ணையினை குத்தகைபெறுவோர்க்கு கையளிப்பு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் வாகனம் திணைக்கள பாவனைக்காக எடுத்துக்கொள்ளப்படும்.	பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்
(ஈ)	செக்கடிப்புலவு ஆட்டுப் பண்ணையில் மீளாய்வாண்டில் கூட்டுமொத்தம் ரூபா 672,676 செலவிடப்பட்டிருந்தும் ரூபா 379,800 பெறுமதியான வருமானமே உழைக்கப்பட்டிருந்தது.	மேற்படி குறைபாடுகளை தீர்க்கும் வகையிலான திட்டம் ஒன்றிற்காக மத்திய கால்நடை அமைச்சின் நிதியுதவியுடன் திட்டம் ஒன்று ஆரப்பிக்கப்படவுள்ளது. மேற்படி வேலைத்திட்டங்கள் நிறைவுற்றதும் வருமானங்கள் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் காணப்படும்.	ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்
(உ)	கோழி வளர்ப்பு நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையிலுமே தொழிற்பட்டுள்ளதுடன் மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி கொடையின் கீழ் கோழி வளர்ப்பதற்கான கட்டடம் புனரமைத்தல் வேலைக்கென ரூபா 1,258,450 செலவிடப்பட்டிருப்பினும் 6 வருட காலமாக எவ்வித முன்னேற்ற நடவடிக்கையும் இடம்பெறாது கைவிடப்பட்டுள்ளது.	கோழிப் பண்ணையானது நீண்டகாலமாகப் பயன்பாட்டுக்குட்படுத்தப்படாத நிலையில் அதனை பயன்படுத்தும் நோக்கில் நிதியாண்டில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டபோதிலும் மின்இணைப்பு மற்றும் உணவு வழங்குவதற்கான உபகரணங்கள் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளமையால் குறித்த வேலைகள் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் பயன்பாட்டுக்கு உட்படுத்தப்படும்.	ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்
(ஊ)	கூட்டுமொத்தம் ரூபா 2,484,251 பெறுமதியான 5 எண்ணிக்கையான பல்வேறு திட்டங்களுக்கென பெற்றுக்கொள்ளப்பட்ட வைப்புக்களில் திட்டக்காலப்பகுதி முடிவடைந்துள்ள போதிலும் அறிக்கைத் திகதி வரை	JICA - ரூபா 905,271 தொகையானது கால்நடை வைத்திய அலுவலகங்களுக்கு மாதாந்தம் வழங்கப்பட்டு வருகின்றது. JSB - செயற்திட்டம் ரூபா 1,024,858 கொடுப்பனவுகள்	பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்

	பயன்படுத்திக்கொள்ள கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் உரிய நடவடிக்கை எடுக்கபட்டிருக்கவில்லை.	மேற்கொள்ளப்பட்டதும் மிகுதி தொகையானது உடன்படிக்கையின் பிரகாரம் நிர்வாக செலவினத்திற்கு மீளளிக்கப்படும்.	
(எ)	கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் 02 எண்ணிக்கையான ரூபா 4,911,000 பெறுமதியான வாகனங்கள் உரிய காலப்பகுதிகளில் பழுதுபார்க்கப்படாத நிலையில் 05 வருட காலமாக விளைவற்றுக் காணப்படுகின்றது.	இல: 05/2024 இன் ஏற்பாடுகளிற்கு அமைவாக வாகனங்கள் அவற்றின் இயந்திர கொள்ளளவு அதிகரிப்பு மற்றும் பொருளாதாரச் சிக்கனமற்ற காரணங்களினால் அவற்றினை தீர்த்தொதுக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது.	பழுதடைந்த வாகனங்களை திருத்தி பயன்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்
(ஏ)	மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடையின் கீழ் சூரிய மின்கலத்தொகுதி பொருத்துதல் வேலைத்திட்டத்திற்கு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் மீளாய்வாண்டில் கூட்டுமொத்தம் ரூபா 8,950,654 பெறுமதிக்கு வழங்கப்பட்டிருந்தும் உரிய காலத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் கடந்த 132 நாட்களாக வருமானம் பெறும் சந்தர்ப்பம் மாகாணசபைக்கு இழக்கப்பட்டிருந்தது.	மீளாய்வாண்டில் கூட்டுமொத்தம் ரூபா 8,950,654 பெறுமதிக்கு வழங்கப்பட்டிருந்தும் ஒப்பந்தத்தின் பிரகாரம் 2024 நவம்பர் 01 ஆம் திகதி முடிவடைந்திருக்க வேண்டிய குறித்த வேலைத்திட்டம் உரிய காலத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருக்காமை காரணமாக கடந்த 132 நாட்களாக வருமானம் பெறும் சந்தர்ப்பம் மாகாணசபைக்கு இழக்கப்பட்டிருந்தது.	குறித்த காலப்பகுதியில் வருமானத்தை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்

1.5.21 தலைப்பு – 490 - தொழிற்துறைத் திணைக்களம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	12 நெசவு நிலையங்களின் 10 வருடங்களுக்கு முற்பட்ட பெறுமதி ரூபா 595,000 கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்த அதேவேளை குறித்த கட்டடங்களின் இன்றைய பெறுமதி மீள மதிப்பிடப்பட்டு கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மதிப்பீடு செய்யப்பட வேண்டிய காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பில் 21 ஏப்ரல் 2025ம் திகதி கடிதம் மூலம் விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு விலை மதிப்பீட்டிற்காக கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.	கணக்குகளில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்
(ஆ)	நல்லூர் வடக்கு நெசவு நிலையத்தில் கடந்த ஒரு வருட காலமாக பயிற்சியாளர்கள் எவரும் நிலையத்திற்கு சமுகமளித்திருக்காததுடன், கந்தர்மடம் நிலையத்தில் செயற்பாட்டுக்கிரயம் ஆண்டிற்கு அண்ணளவாக ரூபா 930,418 ஆகக் காணப்படுகின்ற போதிலும் ஆகஸ்ட் மாதமளவிற்கு பின்னர் எந்தவிதமான	ஒன்றுக்கு மேற்பட்ட தறிகள் விசேட உற்பத்திகளின் போது உற்பத்திகள் மேற்கொள்வதற்கும் தேவைப்படுவதனால் வீடுகளில் வைத்து நெசவு உற்பத்தி செய்பவர்களின் கோரிக்கைக்கேற்ப தறிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும்	ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்

	பயிற்சிகளும் வழங்கப்பட்டிருக்கவில்லை.	பயிற்சியாளர்களை பெற்றுக்கொள்வதில் ஏற்படும் சவால்கரின் நிமித்தம் தறிகளுக்கேற்ற வகையில் நெசவாளர்கள் இணைக்கப்படவில்லை.	
(இ)	2022 ஆம் ஆண்டிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 7 எண்ணிக்கையான ரூபா 700,000 பெறுமதியான கைத்தறி உபகரணங்கள் பயன்பாடின்றி சுன்னாகம் சாயமிடும் நிலையத்தில் காணப்படுகின்றது.	சுன்னாகம் சாயமிடும் நிலையத்தில் 3 எண்ணிக்கையிலான தறிகள் மட்டுமே தற்போது காணப்படுகின்றது. அவை உருத்திரபுரம் நெசவுநிலையத்திற்கு வழங்கப்படவுள்ளது. மீதியான 04 தறிகள் நெசவு நிலையங்களுக்கு வழங்கப்பட்டுவிட்டது.	பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்
(ஈ)	நிதியாண்டின் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்கான ரூபா 1,218,263 பெறுமதியுள்ள 26 கொடுப்பனவுகள் நிதியாண்டில் செலுத்தப்படாது நிலுவையாகக் காணப்பட்டிருந்த போதும், இக் கொடுக்கல்வாங்கல்கள் பொறுப்புக்கள் பற்றிய கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.	கொடுப்பனவுகளிற்கான அனுமதிகள் மற்றும் சிட்டைகள் கிடைக்கப்பெறாமையால் பொறுப்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில் லை. எதிர்காலங்களில் குறித்த விடயம் கருத்தில் கொள்ளப்பட்டு பொறுப்பாக வெளிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும

1.5.22 வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபார்சுகள்
வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் அனுமதிக்கப்பட்ட ஆளணி 15 ஆக காணப்படுகின்ற போதும் நிரந்தர உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு நிறுவனம் முழுமையாக செயற்பட மாகாணசபை நடவடிக்கை எடுக்காதிருந்தது.	சுற்றுலாப்பணியகமானது சுயவருமானமீட்டலூடாக செயற்பட மாகாண சபை ஸ்தாபிக்கப்பட்டதும் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.	ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்

1.5.23 அரச ஊழியர் முற்பணக் கணக்குகள்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	சிபார்சு
01 அமைச்சு மற்றும் 06 திணைக்களங்களில் கடமையாற்றி வெளியக நிறுவனங்களுக்கு மாற்றலாகி, பதவிவெறிதாக்கப்பட்டு, ஓய்வுபெற்றும் மற்றும் மரணமடைந்த அலுவலரிடமிருந்து கிடைக்கப்பெற வேண்டிய அரச ஊழியர் முற்பணங்கள் ரூபா 2,376,457 தொடர்பில் 01 – 14 வருட வீச்சில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மாகாண சபையினால் எடுக்கப்பட்டு தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	பதில் வழங்கப்படவில்லை	ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்

1.5.24 அரசாங்க மானியம்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	சிபார்சு
பல்வேறுபட்ட செயற்திட்டங்களினூடாக மாகாண சபைக்கு வழங்கப்பட்ட கொடைகள் மற்றும் மானியங்களில் ரூபா 2,386 மில்லியன் பெறுமதியான நிதி குறைப்பயன்பாடுடையதாகக் காணப்படுகின்றது.	மீண்டுவரும் செலவினங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தமை.	பாதீட்டு நிதி உச்சளவில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்

1.5.25 இனங்காணப்பட்ட நட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபார்சுகள்
அரச விலை மதிப்பீட்டாளரால் ரூபா 100,000 வருடாந்த குத்தகையாக கடலட்டை பண்ணைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையை மாகாண ஆளுநர் ரூபா 40,000 ஆல் குறைத்துள்ளமையால் கடந்த 03 ஆண்டுகளில் மாகாண சபைக்கு ரூபா 113,465,101 வருமான இழப்பு ஏற்பட்டிருந்தது.	மாகாண காணி ஆணையாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட திட்ட அறிக்கையினை அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ஒரு ஏக்கருக்கான வருடாந்த குத்தகை வாடகையாக ரூபா 100,000 தீர்மானிக்கப்பட்டது. மீளாய்வு கோரிக்கைக்கமைய திருத்தப்பட்ட தொகை தீர்மானிக்கப்பட்டு ஆளுநர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டது	பிரதம மதிப்பீட்டாளரினால் நிர்ணயிக்கப்பட்ட விலையினை மாற்றம் செய்யாது வருமானத்தினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

1.5.26 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட வளங்கள் / வெளி நிறுவனங்களுக்குச் சொந்தமான வளங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபார்சுகள்
மாகாணத்திற்கு சொந்தமான ரூபா 59,800,000 பெறுமதியான 03 வாகனங்கள் 2 தொடக்கம் 6 வருடங்களுக்கு மேலாக ஏனைய நிறுவனங்களுக்கு பயன்படுத்துவதற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து மீள பெறுவதற்கு மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	குறித்த 03 வாகனங்களும் உரிய நிறுவனங்களிடமிருந்து மீளப் பெறுவதற்கு தொடர்ச்சியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.	மீளப் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்